01 DEC 2023

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவண்ணாமலை மாவட்டம் – பணியிடைக் காலமான மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ரா.நேதாஜி என்பவரின் மகன் திரு.நே.கிஷோர் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்தது – பணிவரன் முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ–6) துறை**

**அரசாணை (4ப) எண்:21** **நாள்:24.11.2023**

**சோபகிருது, கார்த்திகை–8**
**திருவள்ளுவர் ஆண்டு 2054.**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறை ஆணை ந.க.எண்.7872/2020/பஅ3, நாள்:13.12.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.34207/2022/டி1, நாள்:12.062023.

-----

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 18.04.2018 அன்று பணியிடைக் காலமான திரு.ரா.நேதாஜி என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.நே.கிஷோர் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 29.12.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.ரா.நேதாஜி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண்பருவத்தினை 31.05.2000 பிற்பகல் அன்று நிறைவு செய்துள்ளார் என்றும் அவரது மகன் திரு.நே.கிஷோர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி 05.02.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் தனியர் திரு.நே.கிஷோர் 27.04.2000 அன்று பிறந்துள்ளார் என்றும் மேலும், தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10–ம் வகுப்பு) மார்ச் 2015 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தனியரின் குடும்பம் வறிய நிலையில்

உள்ளது என்று வேலூர் வட்டாட்சியர் அளித்துள்ள ஒருங்கிணைந்த சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசு ஊழியர் இறந்த நாளில் (18.04.2018) தனியரின் வயது 17 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 19 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 21 என்றும் தெரிவித்துள்ளார். தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்று வேலூர் வட்டாட்சியர் சான்றளித்துள்ளார் என்றும், தனியர் 29.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.நே.கிஷோர் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 29.12.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ப.செந்தில்குமார்
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-35
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.

**நகல்:**

திரு.நே.கிஷோர், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருவண்ணாமலை மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.)
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9,
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/11/23
பிரிவு அலுவலர்